குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.112/2020

அ.சா.6

2025–ம் ஆண்டு நவம்பர் 18–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 06–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சத்தியமூர்த்தி | தொழில் | |
| தந்தை பெயர் | நடராஜன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.03 மணி,

Accused Gnanasekaran present. Advocate Mr.T.Ranganathan present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது, தருமபுரி மாவட்ட தனிப்பிரிவு குற்றப்புலனாய்வு பிரிவுல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.02.2019 ஆம் தேதி தொளசம்பட்டி காவல்நிலைய உதவி ஆய்வாளராக நான் பணியிலிருந்தபோது, காலை 06.00 மணிக்கு பாரப்பட்டி சின்னூர் கிராமத்தை சேர்ந்த கோவிந்தன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.44/2019 சட்டப்பிரிவுகள் 279, 304(எ) இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியிடு செய்யப்படுகிறது.)**

2. முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. சம்பவம் நடந்த மறுநாள் காலை 06.00 மணிக்கு அ.சா.1 கோவிந்தன் புகார் கொடுத்தார். புகாரை மேற்படி அ.சா.1 கோவிந்தன் எழுத்து மூலமாக தான் கொடுத்தார். சரிவர விசாரணை செய்யாமல் அ.சா.1க்கு நஷ்டஈடு பெறவேண்டும் என்பதற்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.18 17:12:00 +0530

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.08 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.18 17:12:03 +0530